Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Justiz- und Polizeidepartement EJPD
Département fédéral de justice et police DFJP
Dipartimento federale di giustizia e polizia DFGP
**Staatssekretariat für Migration SEM**
**Secrétariat d'Etat aux migrations SEM**
**Segreteria di Stato della migrazione SEM**



# சுருக்கமான தகவல்கள்

**B** அங்கீகரிக்கப்பட்ட அகதிகள்

**F** தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள்

**F** தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள்

tamil/tamoul/tamil



# ஸ்விட்சர்லாந்துக்கு வரவேற்கிறோம்!

ஸ்விட்சர்லாந்தில் உங்களுக்குப் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது அல்லது தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளீர்கள். உங்கள் நிலை சிறப்பு விதிகளுக்கு உட்பட்டது. இந்தக் கையேட ்டில் இவை பற்றி உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

நீங்கள் இப்பபோது ஸ்விட்சர்லாந்தில் நீண்ட காலம் வாழப்போகிறீர்கள். ஆகவே கூடுமான விரைவில் இதற்கேற்ப உங்களைப் பழகிக்கொள்ள வேண்டியது முக்கியமானாதாகும். உங்கள் உரிமகைள் மற்றும் கடமைகளை அறிந்துகொள்ளுதல் மற்றும் வேலை மற்றும் கல்வியபைப் பெறுவதற்கு முயற்சித்தல் ஆகியவை உட்பட மற்ற பல விஷயங்களும் இதில் அடங்கும். இந்தக் கையேட்டில், உங்கள் நிலைக்குப் பொரு த்தமான குறிப்பிட்ட விதிகள் பற்றிய அடிப்படைத் தகவல்களைப் பார்க்கலாம் மேலும் கூடுதல் தகவல்கள் மற்றும் முகவரிகளு க்கான இணைப்புகளையும் பார்க்காலாம்.

குடியேற்றத்துக்கான தேசிய தலைமைச் செயலகம் (SEM)

இந்தக் கையேடு எலக்ட்ரானிக் வடிவில், www.sem.admin.ch/info-integration என்ற இணைப்பில் பின்வரும் மொழிகளில் கிடைக்கிறது: ஜெர்மன், ஃபிரெஞ்சு, இத்தாலியன், அராபிக், டிக்ரின்யா, குர்திஷ், திபெத்தன், ஃபார்சி, தமிழ், சோமாலி மற்றும் செர்பியன்/குரோஷியன்/பஸ்னியன்



www.sem.admin.ch/info-integration

# சுருக்கமான தகவல்கள்

| | |
|---|---|
| B | அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் |
| F | தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் |
| F | தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள் |

B

## அங்கீகரிக்கப்பட்ட அகதிகள்

தன்னுடைய சொந்த நாட்டில் ஒறுவருடைய இனம், மதம், தேசியம், ஒரு குறிப்பிட்ட குழுவைச் சார்ந்திருத்தல் அல்லது அவருடைய அரசியல் கொள்கைகள் காரணமாக கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்கிற அல்லது அப்படிப்பட்ட நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான நியாயமான அச்சுறுத்தலு க்கு உள்ளாகிற நபரே அகதி எனப்படுகிறார். இந்த விளக்கம், அகதிகள் நிலை தொடர்பான உடன்படிக்கையை (ஜெனிவா அகதிகள் உடன்படிக்கை) அடிப்படையாகக் கொண்டுள்ளது. கு றிப்பாக உயிருக்கு, உடலுக்கு அல்லது சுதந்திரமாக நடமாடு வதற்கு அச்சுறுத்தல் ஏற்படுதல் அல்லது தாங்கமுடியாத மனஅ ழுத்தத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் போன்றவை கடுமையான நெருக்கடிகளில் அடங்கும். வெளியேறுவதற்குப் பெண்களுக்கென்று தனிப்பட்ட காரணங்கள் இருக்கலாம், அவை யும் கருத்தில் கொள்ளப்படும்.

மேலே குறிப்பிட்ட அச்சுறுத்துல்களுக்கு ஆளாகக்கூடிய இடத்துக்கு எந்த நபரையும் வெளியேற்றவோ அல்லது திருப்பி அனுப்பவோ கூடாது என்பதையும் ஜெனிவா அகதிகள் உடன்படிக்கை குறிப்பிடுகிறது.

### சட்ட அடிப்படை

அகதியின் சட்டபூர்வ அந்தஸ்து என்பது ஜெனிவா அகதிகள் உடன்படிக்கயின் விளைவாக எழுகிறது. தேசிய அளவில், இது புகலிட சட்டத்திற்குள் வருகிறது (புகலிட சட்டத்தின் சட்டப்பிரி வு 58-62). இது தொடர்பான சட்டங்களை இங்கே காணலாம்: www.admin.ch/ch/d/sr/c142_31.html



## வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுகள்

அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் சட்டபூர்வமாக வசித்து வரும் மாநிலத்தில் வாழ்வதற்கான அடையாள அட்டையப் பெற உரிமையுள்ளவர்கள் (வெளிநாட்டவர் குடியுரிமை அனுமதிச்சீட்டு B). இது ஒரு ஆண்டு என்ற வரம்புக்குட்பட்டது, ஆனால் அவர்களை அகதிகளாக அங்கீகரித்தற்கான காரணங்கள் அப்ப டியே இருக்கும் வரை வழக்கமாக இது புதுப்பிக்கப்படும். ஸ்விட்சர்லாந்தில் சட்டபூர்வமாக 10 ஆண்டுகள் வாழ்ந்த பின்னர், ஒருங்கிணைந்து வாழ்வதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அங்கீகரிக்கப்பட்ட அகதிகளுக்கு நிரந்தரக் குடியுரிமைக்கு அனுமதி (C அனுமதிச்சீட்டு) வழங்கப்படும். தாங்கள் வாழும் சமூகத்துடன் நல்லபடி ஒருங்கிணைந்து வாழ்கிற மற்றும் தாங்கள் வாழும் சமூகத்தின் உள்ளூர் மொழியில் பேச இயலுகிற நபர்கள், சட்டபூர்வமாக 5 ஆண்டு கள் வாழ்ந்த பின்னர் நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.

F

# தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள்

அகதி என்ற நிலைக்குத் தகுதி பெற்றுள்ள ஆனால் புகலிடம் அளிக்காமல் இருப்பதற்கான காரணங்கள் உள்ளதால் புகலிடம் அளிக்கப்படாமல் இருக்கும் ஒரு நபர் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதி எனப்படுகிறார். ஒரு நபர் தன் தாய்நாட்டிலிருந்து வெளியேறுவதன் மூலம் அல்லது தாய் நாட்டிலிருந்து வெளியேறியபிறகு அவருடைய நடத்தை காரணமாக அகதி என்ற நிலை ஏற்பட்டிருக்கலாம். புகலிடம் அளிக்காமல் இருப்பதற்கான காரணங்கள் உள்ள அகதிகள் தற்காலிகமாக அனுமதிக்கப்படுவர்.

## சட்ட அடிப்படை

தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதியின் சட்டபூர்வ அந்தஸ்து என்பது ஜெனிவா அகதிகள் உடன்படிக்கையின் விளைவாக எழுகிறது. தற்காலிக அனுமதி என்பது, வெளிநாட்டவர்களுக்கான ஃபெடரல் சட்டத்திற்குள் வருகிறது (AIG) (AIG ன் சட்டப்பிரிவு 83-88a).

இது தொடர்பான சட்டங்களை இங்கே காணலாம்:
www.admin.ch/ch/d/sr/c142_20.html

## வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுகள்

தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள் ஒரு F அனுமதிச்சீட்டைப் பெறுவார்கள். இது அதிகபட்சம் 12 மாதங்களுக்கு அளிக்கப்படும், அவர்கள் வாழ்கிற மாநிலத்தால் மேலும் 12 மாதங்களுக்கு புதிப்பிக்கப்படலாம். சட்டபூர்வமாக 5 ஆண்டுகள் ஸ்விட்சர்லாந்தில் வாழ்ந்த பிறகு, தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள் குடியுரிமை அனுமதிக்கு (B அனுமதிச்சீட்டு) விண்ணப்பிக்கலாம். அதிகாரிகள் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் போது, சமூகத்துடனான ஒத்துழைப்பு, குடும்ப பிணைப்புகள் மற்றும் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பும் சூழல் போன்றவற்றை கருத்தில் கொள்வார்கள்.

## தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள்

F

புகலிட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு பின்வரும் காரணங்களினால் அவரை வெளிறேற்றுவது அல்லது திருப்பி அனுப்ப முடியாமல் போகும் நபர் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர் எனப்படுகிறார். வெளியேற்றுவதை நடை முறைப்படுத்துவது சாத்தியமில்லை (உதாரணமாக: பாஸ்போர்ட் போன்ற பயண ஆவணங்கள் எதையும் பெறமுடியாதபோது), அனுமதிக்கப்படவில்லை (அப்படி வெளியேற்றுவது சர்வதேச சட்டங்களை மீறுவதாக இருந்தால்) அல்லது நியாயமற்றதாக இருத்தல் (உதாரணமாக, போர் காரணமாக அல்லது அவருடயை சொந்த நாட்டில் வன்முறையான சூழல் நிலவுதல்).

### சட்ட அடிப்படை

தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள் என்பது, வெளிநாட்டவர்களுக்கான ஃபெடரல் சட்டத்திற்குள் வருகிறது (AIG) (AIG ன் சட்டப்பிரிவு 83-88a).
இது தொடர்பான சட்டங்களை இங்கே காணலாம்:
www.admin.ch/ch/d/sr/c142_20.html

### வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுகள்

தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள் ஒரு F அனு மதிச்சீட்டைப் பெறுவார்கள். இது அதிகபட்சம் 12 மாதங்களுக்கு அளிக்கப்படும், அவர்கள் வாழ்கிற மாநிலத்தால் மேலும் 12 மாதங்களுக்கு புதிப்பிக்கப்படலாம். சட்டபூர்வமாக 5 ஆண்டுகள் ஸ்விட்சர்லாந்தில் வாழ்ந்த பிறகு, தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனு மதிக்கப்பட்ட நபர்கள் குடியுரிமை அனுமதிக்கு (B அனுமதிச்சீட டு) விண்ணப்பிக்கலாம். அதிகாரிகள் விண்ணப்பத்தைப் பரிசீலிக கும் போது, சமூகத்துடனான ஒத்துழைப்பு, குடும்ப பிணைப்புகள் மற்றும் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பும் சூழல் போன்றவற்றை கருத்தில் கொள்வார்கள்.

## வசித்தல்

B
F
F

அங்கீகரிக்கப்பட்ட அகதிகள், தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு, புகலிட செயல்முறையின் போது அல்லது அது முடிவடைந்தபிறகு ஒரு மாநிலம் ஒதுக்கப்படும். புகலிடம் பற்றிய முடிவு எடுக்கப்பட்ட பிறகு அவர்கள் அதே மாநிலத்தில் தொடர்ந்து தங்கியிருப்பார்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாநிலத்தில் எங்கு வசிப்பது என்பதை நீங்கள் சுதந்திரமாகத் தெரிவு செய்யலாம். சமூகநலத் திட்ட உதவிகளைப் பெறும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கான வாழ்விடம் அல்லது தங்குமிடத்தை மாநில அதிகாரிகள் ஒதுக்குவார்கள். நீங்கள் தங்கியிருக்கும் முகவரியை, பொறுப்பிலுள்ள மாநில அதிகாரிக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். வெளிநாட்டவர் குடியுரிமை அனுமதிச்சீட்டு, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாநிலத்தில் மட்டுமே செல்லுபடியாகும்.

**வாடகைதாரர்களுக்கான பயனுள்ள தகவல்கள், 16 மொழிகளில்:**
**www.bwo.admin.ch/bwo/de/home/wie-wir-wohnen/infoblatt-wohnen/infoblatt.html**

**ஸ்விஸ் வாடகைதாரர் அசோசியேஷன்:**
**www.mieterverband.ch**

# வேறு மாநிலத்துக்கு மாறுதல்

B அங்கீகரிக்கப்பட்ட அகதிகள்: அங்கீகரிக்கப்பட்ட அகதிகள், வேறு மாநிலத்துக்கு மாற விரும்பினால் அவர்கள் செல்ல விரும்பும் மாநிலத்தின் குடியேற்றத் துறை அதிகாரிகளிடம் மாநில மாறுதலுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். விண்ணப்பதாரர் நிரந்தரமாக சமூகநலத் திட்டங்களை சார்ந்தவராக இல்லையெனில் அல்லது குடியேற்றச் சட்டத்தின்படி அவருக்கான அனுமதி விலக்கிக் கொள்ளப்படுவதற்கான காரணங்கள் எதுவுமில்லை என்றால் பெரும்பாலும் விண்ணப்பம் அங்கீகரிக்கப்படும்.

---

F தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள்: தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மாநில மாறுதலுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் நிரந்தரமாக சமூகநலத் திட்டங்களை சார்ந்தவராக இல்லையெனில் அல்லது குடியேற்றச் சட்டத்தின்படி அவருக்கான அனுமதி விலக்கிக் கொள்ளப்படுவதற்கான காரணங்கள் எதுவுமில்லை என்றால் பெரும்பாலும் விண்ணப்பம் அங்கீகரிக்கப்படும். மாநில மாறுதலுக்கான விண்ணப்பம் நேரடியாக SEM இடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

---

F தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள்: தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டவர் மாநில மாறுதலுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் நேரடியாக SEM க்கு அனுப்பப்பட வேண்டும். பிறகு SEM அந்தக் குறிப்பிட்ட மாநில அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து விண்ணப்பத்தை அங்கீகரிக்கலாமா வேண்டாமா என முடிவுசெய்யும். விண்ணப்பதாரருக்கு குடும்பத்தினருடன் சேரும் உரிமையிருந்தால் அல்லது இரண்டு மாநிலங்களும் மாற்றத்துக்கு ஒப்புக் கொண்டால் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படும்.

# வெளிநாட்டுக்குப் பயணித்தல்

B
F

அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள், தாங்கள் வாழும் மாநிலத்தின் குடியேற்ற அலுவலகத்தில் அகதிகளுக்கான பயண ஆவணத்துக்காக விண்ணப்பிக்கலாம். இதைப் பயன்படுத்தி அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று ஸ்விட்சர்லாந்துக்குத் திரும்பி வரலாம். இதைச் செய்வதற்கு, நீங்கள் குடியேற்ற அலுவலகத்துக்கு நேரடியாகச் செல்ல வேண்டும். பயண ஆவணம் SEM ஆல் வழங்கப்படுகிறது, பொதுவாக இது ஐந்து ஆண்டுகளுக்கு செலலுபடியாகும்.

முக்கியமானவை: அகதிகளுக்கான பயண ஆவணம், உங்கள் தாய்நாட்டுக்குச் செல்லும் உரிமையை உங்களுக்கு அளிக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட அகதி அல்லது தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதி தன்னுடயை தாய்நாட்டுக்குப் பயணித்தால் அவரூடைய அகதி அந்தஸ்து விலக்கப்படலாம்.
மேலும், அகதிகளுக்கான பயணம் ஆவணம் இருந்தாலே நீங்கள் பிற நாடுகளுக்குச் செல்லும் உரிமையைப் பெற்று விட்டதாகப் பொருள் கொள்ள முடியாது. விசா இல்லாமல் மூன்று மாதங்கள் வரை, சுற்றுலா காரணங்களுக்காக ஷென்ஜென் பகுதிக்குள் நுழைவது என்பது சாத்தியமே. பிற நாடுகளுக்குச் செல்வதற்கு உங்களுக்கு விசா தேவைப்படும். நீங்கள் பயணிக்க விரும்பும் நாடுகளின் அதிகாரிகளிடம் கேட்டு த்தெரிந்துகொள்ளுங்கள்.



---

F

தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள் விடும்பியபடி வெளிநாடுகளுக்குப் பயணிக்க முடியாது. நீங்கள் உங்கள் தாய்நாட்டில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டை SEM இல் ஒப்படைக்க வேண்டும். நியாயமான காரணங்கள் இருக்கும்பட்சத்தில் (உதாரணமாக, கடுமையாக நோய்வாய்ப்படுதல் அல்லது குடும்ப உறுப்பினர்கள் மரணித்தல்), மாநில குடியேற்ற அலுவலகத்துக்கு நேரடியாகச் சென்று திரும்பி வருவதற்கான விசாவுக்கு விண்ணப்பிக்கலாம். உங்கள் தாய்நாட்டில் உங்களால் கடவுச்சீட்டைப் பெற இயலவில்லையென்றால், நீங்கள் வெளிநாட்டவருக்கான பயண ஆவணத்துக்காக விண்ணப்பிக்கலாம், இதன் மூலம் நீங்கள் பயணிக்க முடியும். அங்கீகரிக்கப்பட்ட பயணத்துக்கு மட்டுமே இந்தப் பயண ஆவணத்தைப் பயன்படுத்தலாம்.

# குடும்பம் ஒன்று சேருதல் மற்றும் குடும்பமாக தஞ்சமடதைல்

B

அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் ஸ்விட்சர்லாந்துக்கு தங்களுடைய குடும்ப உறுப்பினர்களை (கணவன், மனைவி, பதிவுசெய்யப்பட்ட துணைவர், 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள்) அழைத்து வர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குடும்ப உறுப்பினர்கள் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்குப் புகலிடம் அளிக்கப்படும். இவர்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பே ஒரே குடும்பமாக வாழ்ந்திருக்க வேண்டும் மற்றும் இதனை தடுப்பதற்கான பிரத்யேக சூழல் எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும்.
அங்கீகரிக்கப்பட்ட அகதி என்ற அந்தஸ்தைப் பெற்ற பிறகு அங்கீகரிக்கப்பட்ட அகதிகளுக்குப் பிறக்கும் எந்தவொரு குழந்தையும் தானாகவே அங்கீகரிக்கப்பட்ட அகதி அந்தஸ்தைப் பெறமாட்டார்கள் இந்தக் காரணத்தினால், குழந்தை பிறந்தவுடன் கூடுமான விரைவில் SEM இல் புகலிட விண்ணப்பத்தை அளிக்க வேண்டும். இதன் மூலம் குழந்தகைக்கும் அகதி அந்தஸ்து வழங்கப்படும்.

---

F
F

தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள், மாநில குடியேற்ற அதிகாரிகளிடம், குடும்பத்துடன் சேருவதற்கான விண்ணப்பத்தை அளிப்பதற்கு தற்காலிக அனுமதி பெற்றதிலிருந்து குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.
குடும்பம் ஒன்று சேருதல் திட்டத்தின் கீழ் கணவன், மனைவி, பதிவுசெய்யப்பட்ட துணைவர்கள் மற்றும் 18 வயதுக்குட்பட்ட திருமணம் ஆகாத பிள்ளைகளை மட்டுமே ஸ்விட்சர்லாந்துக்கு அழதைத்து வரலாம். குடும்பம் ஒன்று சேருவதற்கான நிபந்தனைகளாக, அந்தக் குடும்பத்தினர் ஒரே வீட்டில் வாழவேண்டும், வீடு அனைவருக்கும் போதுமானதாக இருக்கவேண்டும், அவர்கள் சமூக நலத்திட்டங்களை சார்ந்திருப்பவர்களாக இருக்கக் கூடாது மேலும் வாழுமிடத்தின் உள்ளூர் மொழி தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். குடும்பம் ஒன்று சேருவதற்கான நேரம் சார்ந்த தேவைப்பாடுகள் பூர்த்தியானால், அதிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் குடும்பம் ஒன்று சேறுவதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 12 வயதுக்து மேற்பட்ட பிள்ளைகளை அழைத்து வருவதென்றால், அடுத்த 12 மாதங்களுக்குள் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## ஒருங்கிணைதல்

B
F
F

நீண்ட காலம் ஸ்விட்சர்லாந்தில் வாழுபவர்கள் சாத்தியமான அளவு விரைவாகத் தங்களை சமூகத்துடன் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு நீங்கள் வாழுமிடம் பற்றிய தகவலை சேகரிப்பது, உள்ளூர் மொழியகை கற்றுக்கொள்வது, வேலை தேடுவது மற்றூம் சமூக வாழ்வில் பங்கெடுப்பது ஆகியவை முக்கியமானதாகும். ஸ்விட்சர்லாந்து இந்த ஒருங்கிணைதல் செயல்பாடுகளை பலவித திட்டங்கள் மற்றும் செயல்முறகைள் மூலம் ஊக்குவிக்கிறது மேலும் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கு முயற்சிக்கிறது. ஒருங்கிணைதலின் நோக்கம் என்னவென்றால், உள்ளூர் மக்களும் வெளியிலிருந்து வந்தவர்களும் கூட்டாட்சி சட்டங்களில் உள்ளவற்றுக்கு மதிப்பளித்து, ஒருவருக்கு விட்டுக்கொடுத்த சமாதானதட்டன் வாழவணே்டும் என்பதாகும்.

ஸ்விஸ் நாட்டின் ஒருங்கிணைதல் கொளகை பற்றிய கூடுதல் தகவல்கள்:
www.integrationsagenda.ch
www.sem.admin.ch/bfm/de/home/themen/integration.html

## ஒருங்கிணைதலுக்கான ஆதரவு

B
F
F



அங்கீகரிக்கப்பட்ட அகதிகள், தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள் ஸ்விட்சர்லாந்தில் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான செயல்முறைகளை ஆதரிப்பதற்கு பல்வேறு அரசு மற்றும் தனியார் அமைப்புகள் பாடத்திட்டங்கள் மற்றும் வசதிகளை வழங்குகின்றன. ஆலோசனை கோரவும், இந்த சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் உங்களை ஊக்குவிக்கிறோம். தேவையான தகவல்கள் மாநில அல்லது தனியார் ஒருங்கிணதைல் அலுவலகங்களில் கிடைக்கும்.

ஒருங்கிணதைல் ஆதரவு தொடர்பான கூடுதல் தகவல்கள்:
www.sem.admin.ch/bfm/de/home/themen/integration/foerderung.html

மாநிலஙக்ள் மற்றூம் நகரங்களில் உள்ள ஒருங்கிணைதல் தொடர்பான தொடர்பு மையங்கள்:
www.sem.admin.ch/sem/de/home/ueberuns/kontakt/kantonale_behoerden/kantonale_ansprechstellen.html

மாநில ஒருங்கிணைப்புத் திட்டம் (KIP) பற்றிய தகவல்:
www.kip-pic.ch/de/

## பள்ளி மற்றும் கல்வி

B F F

அங்கீகரிக்கப்பட்ட அகதிகள், தற்காலிமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிமாக அனுமதிக்கப்பட்ட நபர்களின் குழந்தகைள், ஸ்விட்சர்லாந்தில் வாழும் மற்ற குழந்தைகளைப் போல பள்ளிக்குச் செல்ல வேண்டும். கிண்டர்கார்டன் உள்பட, கட்டாயக் கல்வி என்பது 4 வயதில் தொடங்கி 11 ஆண்டுகள் பள்ளிப்படிப்பு வரை நீடிக்கிறது. அதன் பிறகு, அவர்களின் திறமைக்கு ஏற்ப ஒரு தொழிற்கல்வி பயிற்சியை (VET) மேற் கொள்ளலாம் அல்லது உயர்கல்வியையும் பிறகு பல்கலைக்கழகப்படிப்பையும் பூர்த்தி செய்யலாம்.

கட்டாயக் கல்வி மற்றும் VET பற்றிய கூடுதல் தகவல்கள்:
www.ch.ch/private/00060/00062/index.html?lang=de
www.berufsbildung.ch

## கல்வி மற்றும் பயிற்சியைத் தொடருதல்

B F F

ஸ்விஸ் தொழில் சந்தையில், தொழிலாளர்களுக்கு கடுமையான தேவைப்பாடுகள் உள்ளன. இதில் மொழித்திறன் மற்றும் தொழில்நுட்பத் திறன் இரண்டும் அடங்கும். பெரும்பாலும் வெளிநாட்டவரின் தகுதிகள் ஸ்விஸ் தொழில் சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லை அல்லது வெளிநாட்டில் பெற்றத் தகுதிகள் இங்கே அங்கீகரிக்கப்படுவதில்லை. மொழிப் பாடத்திட்டங்கள், கல்வியைத் தொடர்வது அல்லது பிற சலுகைகள் உலகளாவிய வேலைவாய்ப்பைப் பெறுவதில் உங்களுக்கு உதவும். தகுதியான ஒருங்கிணைதல் மையம் மற்றும் தொழில்சார் ஆலோசனை மையங்கள் தேவையான தகவல் மற்றும் ஆலோசனையை உங்களுக்கு வழங்கும்.

நீங்கள் வாழும் மாநிலத்தில் உள்ள தொழிற்பயிற்சி, கல்வி மற்றும் தொழில்வாழ்க்கை ஆலோசனை அலுவலகங்களையும் தொடர்பு கொள்ளலாம்.
www.berufsberatung.ch/dyn/show/8242

B
F
F

# வேலை

சமுகத்தோடு ஒருங்கிணைவைதற்கு வேலை மற்றும் பொருளாதார சுதந்திரம் ஆகியவை முக்கியமானது. நீங்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதை எளிதாக்கும் சலுககைளின் அனுாகூலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் மேலும் தகுதியுடயை அதிகாரிகளின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் முழு முயற்சியோடு வேலை தேடவேண்டும்.

ஸ்விட்சர்லாந்து மூழுவதும் எங்கு வேண்டுமானாலும் நீங்கள் பலனளிக்கும் வேலையைப் பெறலாம். சில குறிப்பிட்ட நிலைகளில், நீங்கள் வாழும் மாநிலத்திற்கு வெளியே ஒரு வாரம் வரை தங்குவது சாத்தியம். உங்களுக்கு வேலை வழங்கியவர், நீங்கள் வேலையில் சேருவதற்கு முன்னர் வேலை செய்யுமிடத்திலுள்ள பொறுப்புள்ள மாநில அதிகாரிக்கு உங்கள் வேலை பற்றிய தகவலைத் தெரிவிக்கவேண்டும். வேலை நீக்கம் அல்லது பணி மாற்றமும் தெரிவிக்கப்பட வேண்டும். இந்தத் தகவல் தெரிவிப்பு, ஊழியர்களைப் பாதுாகாக்கும் நேக்கம் கெண்டது மட்டுமல்லாமல் பிற விஷயங்களுக்குமானதும் ஆகும். மற்றவர்களை விட நீங்கள் குறைந்த ஊதியத்துக்கு வேலை செய்வதைத் தடுக்கும் நோக்கம் கொண்டது.
மாநிலம் மாறுவது தொடர்பான விதிகள் (பக்கம் 7 ஐப் பாருங்கள்) இப்போதும் கடைபிடிக்கப்பட வேண்டும்.



வேலை மற்றும் வேலையை எப்படித் தேடுவது என்பது பற்றிய பயனுள்ள தகவல்:
www.treffpunkt-arbeit.ch

ஊழியர்கள் பற்றிய தகவல்:
www.ch.ch/private/00054/00055/index.html?lang=de

B
F
F

# சுகாதாரம்

ஸ்விட்சர்லாந்து மிகச்சிறந்த முன்னறேிய சுகாதார அமைப்பகைக் கொண்டுள்ளது. நீங்களும் உங்கள் குடும்பமும் எப்படி ஆரோக்கியமாக வாழ்வதும் மற்றும் என்ன சலுகைகள் கிடைக்கிறது என்பது பற்றிய தகவலை நீங்கள் அறிந்துகொள்ள வேணடும்.
ஸ்விட்சர்லாந்தில் வாழும் எல்லோரும் கட்டாயம் ஒரு அடிப்படை மருத்துவக் காப்பீட்டை எடுத்திருக்கவேண்டும். தினசரி வாழ்க்கையின் மற்ற விஷயங்களைப் போலவே, சுகாதாரம் விஷயத்திலும் தகவலை சேகரித்து சாத்தியமான அளவு உள்ளூர் மொழியில் பேசுவதும் முக்கியமானதாகும்.

உடல் மற்ரும் மன நோய்களதைத் தடுக்கவும் அவற்றுக்குச் சிகிச்சையளிக்கவும், ஃபெடரல் சுகாதார அலுவலகம் பல்வேறு மொழிகளில் தகவலை அளிக்கிறது.
www.migesplus.ch

பெர்ன், ஸூரிச், ஜெனிவா மற்றறும் லூசேன் ஆகிய இடங்களில் உள்ள சித்திரவதைக்கு உள்ளானவர்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பப்பட்டவர்கள் மற்றும் அவரின் குடும்பத்தினுருக்கு, ஸ்விஸ் செஞ்சிலுவை சங்கம் (SRC) மரூத்துவப் பராமரிப்பு, உளவியல் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குகிறது.
www.redcross.ch/de/organisation/ambulatorium-fuer-folter-und-kriegsopfer/hilfe-fuer-traumatisierte-menschen



செய்ண்ட் கேலெனில் உள்ள சித்திரவததகைகு உள்ளானவர்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பப்பட்டவர்கள் மற்றும் அவரின் குடும்பத்தினுருக்கு, உளவியல் பாதிப்புக்கான (சைகோட்ரெளமட்டாலஜி) ஸ்விஸ் மையமும் (GRAVITA) மருத்துவப் பராமரிப்பு, உளவியல் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குகிறது.
www.gravita.ch/angebot/

## சமூகக் காப்பீடு

B F F

ஸ்விட்சர்லாந்தில் மிகச்சிறந்த சமூககக் காப்பீடு நெட்வொர்க் உள்ளது. வருமானத்திலிருந்தானா பங்களிப்புகள் மூலம் ஒவ்வொரு சமூகப் பாதுகாப்புக் கிளையும் முன்னதாகவே நிதியளிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அகதி, தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதி மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர் என்ற முறையில் ஸ்விஸ் நாட்டைச் சேர்ந்தவர்களைப் போலவே பங்களிக்கும் கடமையும் பலன்களைப் பெறும் தகுதியையும் உடையவர்கள் ஆவீர்கள். சமூகக் காப்பீடு, காப்பீடு செய்யப்பட்ட நபர்களால் சமாளிக்க முடியாத (உதாரணமாக, வேலையில்லாமல் அல்லது உடலளவில் இயலாமல் இருக்கும்போது) நிதிச் சுமைகளின் அபாயங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறது. முதியோர்களுகான ஓய்வுதியமும் உள்ளது. வாழ்க்கைத் துணை அல்லது பெறறோர் இறந்தாலும் ஓய்வூதியம் வழங்கப்படலாம் (மைனர்களுக்கு). விபத்துக்கள் மற்றும் வேலை சார்ந்த நோய்களுக்கு எதிராக ஊழியர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் நிருவனம் காப்பீட்டைச் செய்கிறது.

சமூகக் காப்பீடு பற்றிய கூடுதல் தகவல்கள்:
www.bsv.admin.ch/bsv/de/home/sozialversicherungen/ueberblick.html

வேலையற்றோருக்கான காப்பீடு பற்றிய கூடுதல் தகவல்கள்:
www.treffpunkt-arbeit.ch/arbeitslos/erste_schritte/

மற்ற வகை காப்பீடுகள் பற்றிய கூடுதல் தகவல்கள்:
www.ch.ch/private/00029/00039/index.html?lang=de



## வரிகள்

B F F

அங்கீகரிக்கப்பட்ட அகதிகள், தற்காலிமாக அனுமதிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிமாக அனுமதிக்கப்பட்ட நபர்கள், ஸ்விட்சர்லாந்தில் கட்டாயம் வரி செலுத்த வேண்டும்: வரிகள் வருமானத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது, அதாவது ஒரு நபரின் ஊதியத்திலிருந்து நேரடியாகப் பிடித்தம் செய்யப்படுகிறது (ஃபெடரல் நேரடி வரி பற்றிய 1990, டிசம்பர் 14 தேதியிட்ட ஃபெடரல் சட்டம் 110 ன் பிரிவு 83). வரி விதிப்பு மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடும்.

# சமூகப் பலன்கள்

B
F
F

சமுக நலத்திட்டங்களுக்கு வரிசெலுத்துபவரின் பணத்திலிருந்து நிதியளிக்கப்படுகிறது. சமூக நலத்திட்டங்களுக்கான தொகை மாநிலத்துக்கு மாநிலம் வறேுபடலாம். இருப்பினும் பெரும் பாலான மாநிலங்களில், சமூகநல அமைப்புகளுக்கான ஸ்விஸ் அசோசியேஷன் (SKOS) ஏற்படுத்தியுள்ள பங்களிப்புக்கான கணக் கீட்டு வழிகாட்டுதல்களள் பின்பற்றப்படுகின்றன.
இது ஸ்விட்சர்லாந்தில் நியாயமான மற்ரும் திறன்மிக்க சமூக நலத்திட்டங்கள் அளிக்கப்படுவதை உறுதிப்படுத்துகிறது.

---

B
F

அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிமாக அமதிக்கப்பட்ட அகதிகள் இரு தரப்பினரும் தங்களைத் தாங் களே கவனித்துக் கொள்வதற்கான பொருளாதார நிலையில் இல்லையென்றால், ஸ்விஸ் குடிமக்களைப் போல அதே சமூக நலத்திட்டங்களபைப் பெறத் தகுதி உடயைவர்களே.

---

F

சமூக நலத்திட்டங்கள் பெறுவதற்கான, தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்களின் கோரிக்கைகள் மாநில சட்டங்களால் ஒழுங்குமுறைப்பமூத்தப்பட்டுள்ளது. பொதுவாக, தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கான சமூக நலத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட அகதிகளுக்கானதைவிட குறைவாகவே இறுக்கும்.



பின்வரும் வலைத்தளத்தில் மேலும் தகவல்கள் உள்ளன:
www.skos.ch/sozialhilfe/haeufig-gestellte-fragen/

வேலை செய்ய இயலும் எல்லோறும் சழூக நலத்திட்டங்களபைப் பெறாமல் சொந்த உழைப்பில் தனக்கும் தன் குடும்பத்துக்கும் தேவையானவற்றை செய்து கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# முக்கியமான வலைத்தளங்கள்

**மாநிலக் குடியேற்றம் மற்றும் தொழில் சந்தை அலுவலங்கள்:**
www.sem.admin.ch/bfm/de/home/ueberuns/kontakt/kantonale_behoerden/adressen_kantone_und.html

**மாநில குடிமக்கள் அலுவலகம்:**
www.sem.admin.ch/bfm/de/home/ueberuns/kontakt/kantonale_behoerden/kantonale_einbuergerungsbehoerden.html

**வேலைவாய்ப்புக்குப் பதிவதற்கான மாநில அலுவலகங்கள்:**
www.sem.admin.ch/bfm/de/home/ueberuns/kontakt/kantonale_behoerden/Adressen_Meldeverfahren.html

**மாநிலங்கள் மற்றும் நகரங்களில் உள்ள ஒருங்கிணைதல் தொடர்பான தொடர்பு மையங்கள்:**
www.sem.admin.ch/bfm/de/home/ueberuns/kontakt/kantonale_behoerden/kantonale_ansprechstellen.html

# பிற பயனுள்ள இணைப்புகள்:

**ஆன்லைன் ஸ்விஸ் அலுவலகங்கள்:**
www.ch.ch

**குடியேற்றத்துக்கான தேசிய தலைமைச் செயலகம் (SEM):**
www.sem.admin.ch

**குடியேற்றத்துக்கான ஃபெடரல் ஆணையகம் (FCM):**
www.ekm.admin.ch



**வெளியீட்டு விவரங்கள்**

| | |
|---|---|
| வெளியிடுபவர் | Staatssekretariat für Migration SEM<br>Quellenweg 6, CH–3003 Bern Wabern |
| ஆசிரியர் | Information und Kommunikation, SEM |
| வரைகலை | meierkolb, Luzern |
| புகைப்படங்கள் | Fabian Biasio, Luzern |
| ஆதாரம் | BBL, Vertrieb Bundespublikationen<br>CH–3003 Bern<br>www.bundespublikationen.admin.ch |

2 ஆம் பதிப்பு 2019


Böhler Thyssen



இந்தக் கையேடு எலக்ட்ரானிக் வடிவில், www.sem.admin.ch/info-integration என்ற இணைப்பில் பின்வரும் மொழிகளில் கிடைக்கிறது: ஜெர்மன், ஃபிரெஞ்சு, இத்தாலியன், அராபிக், டிக்ரின்யா, குர்திஷ், திபெத்தன், ஃபார்சி, தமிழ், சோமாலி மற்றும் செர்பியன்/குரோஷியன்/போஸ்னியன்

www.sem.admin.ch/info-integration